# கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) மாணவர்களின் ஆங்கிலப் பெறுபேறுகளின் வீழ்ச்சி: சம்மாந்துறைக் கல்வி வலயத்திற்குட்பட்ட குறிப்பிட்ட சில பாடசாலைகளை மையப்படுத்தியதோர் ஆய்வு

# The decrease of results in English Language of General Certificate of Education (Ordinary Level) students: A study based on certain schools in Sammanthurai Educational Division

**S.M. Fathima Farasa**
South Eastern University of Sri Lanka
fathimafarasa@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

ஆங்கில மொழியானது இன்று சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதொரு மொழியாக காணப்படுகின்றது. இலங்கையிலும் கூட இன்று ஆங்கில மொழியானது மிகவும் முக்கியமானதாகவும், இரண்டாம் மொழியாகவும் விளங்குகின்றது. மேலும் ஆங்கில மொழி அறிந்திருப்பதானது ஓர் திறனாகவும் (Soft skill) நோக்கப்படுகின்றது. அந்த வகையில் பாடசாலைகளில் ஆரம்ப கல்வி முதல் இரண்டாம் நிலைக் கல்வி வரை ஆங்கில மொழியானது பொதுவானதும், அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமாக கற்பிக்கப்படுகின்றதொரு பாடமாகவும் விளங்குகின்றது. இருந்தாலும் கூட ஆங்கில மொழிப் பெறுபேறுகளானது தொடர்ச்சியாக குறைந்த மட்டத்திலேயே நிலைத்திருப்பதாக காணப்படுகின்றது. ஆகையால் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழியினுடைய பெறுபேறுகள் குறைவடைந்து வருகின்றமையை பிரச்சினைகளாகக் கொண்டும், அவற்றுக்கான காரணங்களைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகக் கொண்டும் இவ் ஆய்வு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இவ்வாய்விற்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டு ஆய்வானது முன்னெடுக்கப்படுகின்றது. இங்கு நேரடி அவதானம், வினாக்கொத்துக்கள், கலந்துரையாடல் என்பன முதலாம் நிலைத் தரவுகளாகவும், நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. அளவுரீதியானதும், பண்பு ரீதியானதுமான தரவுகள் பெறப்பட்டுள்ளதோடு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் உள்ள ஆங்கில மொழி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் 20 வினாக்கொத்துக்கள் பகிரப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. ஆங்கில மொழியினை கற்பதில் உள்ள சொற்ப ஆர்வம், கவனமின்மை என்பன மாணவர்களிடம் காணப்பட்ட பிரச்சினைகளாக கண்டறியப்பட்டன. மேலும் ஆங்கில மொழியினுடைய முக்கியத்துவம் தொடர்பாக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் குறைவாகக் காணப்படுகின்றமை. இச்சந்தர்ப்பத்தில் நவீன கற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்துவதுமே இப்பிரச்சினைக்கான தீர்வாகக் காணப்படும். அந்த வகையில் மாணவர்கள் மத்தியில் சோடி, குழு வேலைகளை அதிகரித்தல், கற்பித்தல் நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்ள கணனி ஆய்வுகூடம், தொலைக்காட்சி பதிவுகள் போன்றவற்றை பயன்படுத்துவது வரவேற்கத்தக்கதாகும்.

***பிரதான சொற்பதங்கள்:*** *ஆங்கில மொழி, கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) மாணவர்கள், பழமையான கற்பித்தல் முறைகள், நவீன கற்பித்தல் முறைகள்*

## ஆய்வின் அறிமுகம்

ஆங்கில மொழியானது இன்று சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்டதொரு மொழியாக விளங்குகின்றது. இவ் ஆங்கில மொழிக்கல்வியும் கூட உலகலாவிய ரீதியில் மிகவும் அவசியமானதாகவே நோக்கப்படுகின்றது. மேலும் எந்தவொரு நாட்டிலும் ஆங்கிலமொழிக் கல்வியானது பொதுவானதாகவும், அடிப்படையானதுமாக அங்கீகரிக்கப்படுகின்றது. இவ் ஆங்கில மொழியானது கிரேக்கம், இலத்தீன், பிரான்ஸ் போன்ற மொழிகளின் சேர்க்கையாக காணப்படுவதனாலோ இம் மொழி சர்வதேச ரீதியாக உயர்ந்த அந்தஸ்தினைப் பெற்று விளங்குகின்றது. இவ்வாறே ஆங்கில மொழியானது பிரித்தானியரின் படையெடுப்பால் எமது நாடான இலங்கைக்கு வந்தாலும் சுதந்திரம் அடைந்த காலப்பகுதி வரை அவர்களது ஆட்சி மேலோங்கி காணப்பட்டது. இருந்தாலும் கூட இவ் ஆங்கில மொழியானது அவர்களின் வருகையின் காரணமாக எம் நாட்டில் ஆட்சி மொழியாக நிலவி வந்தது. மேலும் இவ் ஆட்சி மொழியாகக் காணப்பட்ட ஆங்கில மொழியானது ஆங்கிலேயர் நாட்டிற்கு சுதந்திரத்தை அளித்த பின்னரும் சுமார் 1956ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழியே நாட்டின் சகலவித நடவடிக்கைகளிலும் பரவிக் காணப்பட்டது. அதன் பின்னர் இவ் ஆங்கில மொழி நாடடின் இணைப்பு மொழியாக மாற்றப்பட்டது. மேலும் இன்று கூட இவ் ஆங்கில மொழியானது நாட்டின் இணைப்பு மொழியாகவும், இரண்டாம் மொழியாகவும் விளங்குகின்றது.

பாடசாலைக் கல்வியில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) என்பது மைல்கல்லாகத் திகழ்கின்றது. இக் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) ஆனது பிரதான பாடங்களான மொழி கணிதம், விஞ்ஞானம், சமயம், ஆங்கிலம், வரலாறு எனும் ஆறு பாடங்களில் ஆங்கிலக் கல்வியையும் ஒரு பாடமாகக் கொண்டுள்ளது. மேலும் இவ் ஆங்கில மொழியானது ஆரம்பக் கல்வி முதல் பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளப்பட்டு கற்பிக்கப்படுகின்றது. இருந்தாலும் கூட கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் பெறுகின்ற பெறுபேறுகளானது வீழ்ச்சியானதாகவே காணப்படுகின்றது. அந்த வகையில் சம்மாந்துறை கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளை நோக்குகின்ற போது சிலபாடசாலைகளானது ஆங்கில மொழியை ஊடகமாகக் கொண்டு ஆரம்பக் கல்வி முதல் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) வலையிலான கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
அவ்வாறே சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட சில பாடசாலைகளில் சில மாணவர்களது ஆங்கில மொழிப் பெறுபேறுகளானது உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட சில பாடசாலைகளான அல்-அர்சத் மகா வித்தியாலயம், சென்னல் ஸாகிறா மகா வித்தியாலம், அல்-அஸ்கர் மகா வித்தியாலயம் என்பவற்றை மையப்படுத்தியதோர் ஆய்வினை மேற்கொள்கின்ற போது கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) மாணவர்களின் ஆங்கிலப் பெறுபேறுகளின் வீழ்ச்சி உறுதிப்படுத்தப்பட்டதோடு அவ்வாறான வீழ்ச்சிக்கான காரணங்களும் செப்பனே கண்டறியப்பட்டது. அந்த வகையில் இவ் ஆய்வானது கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) மாணவர்களின் ஆங்கிலப் பெறுபேறுகளின் வீழ்ச்சியானது சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட சில பாடசாலைகளைக் கொண்டதாகவுள்ளது.

**ஆய்வுப் பிரட்சினை**

சம்மாந்துறை கல்வி வலயத்தைப் பொறுத்தவரையில் பாடசாலைகளில் ஆங்கில மொழியானது ஆரம்பக் கல்வி முதல் கற்பிக்கப்பட்டு வருகின்ற அதேவேளை சில பாடசாலைகளில் ஆங்கில மொழியினை ஊடகமாகக் கொண்டும் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இருந்தாலும் கல்விப் பொதுத்தராதரம் (உயர் தர) கொண்ட பெரிய பாடசாலைகள் கூட ஆங்கில மொழிப் பெறுபேறுகள்

என்கின்ற போது குறைந்த பெறுபேறுகளையே தக்க வைத்து வருகின்றது. அந்த வகையில் சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட குறிப்பிட்ட சில பாடசாலைகளை ஆய்வுப்பிரதேசமாகக் கொண்டு அங்குள்ள பாடசாலைகளில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) மாணவர்கள் ஆங்கிலப் பெறுபேறுகளின் வீழ்ச்சி தொடர்பாக காரணங்களைக் கண்டறிவதை இவ் ஆய்வின் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு தொடரப்படுகின்றன. மேலும்,

கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) மாணவர்களின் ஆங்கிலப் பெறுபேறுகளானது தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றதா?

அவ்வாறு ஆங்கிலப் பெறுபேறுகளின் தொடர்ச்சியான வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

அவ்வாறான காரணங்களானது ஆசிரியர்கள் மாணவர்கள் என இரு தரப்பினர் தொடர்பானதாகவும் காணப்படுகின்றதா?

மேலும் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) மாணவர்களது இவ் ஆங்கிலப் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்காக ஏதாவது தீர்வுகள் உள்ளனவா?

அவ்வாறு எனில் தீர்வுகள் யாவை?

இவ்வாறான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதானது பெறுபேறுகளின் தொடர்ச்சியான வீழ்ச்சிக்கான முடிவாகக் காணப்படுமா?

மேலும் இது தொடர்பாக எவ்வாறான மாற்று நடவடிக்கைகளை முன்வைக்கலாம்? போன்ற பிரச்சினைகள் தொடர்பாக இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) மாணவர்களின் ஆங்கிலப் பெறுபேறுகளின் வீழ்ச்சி சம்மாந்துறை கல்வி வலயத்தை மையப்படுத்தியதோர் ஆய்வு எனும் இவ்வாய்வானது அதற்கே என்று தனித்துவமான நோக்கங்களைக் கொண்டதாகவே முன்வைக்கப்படுகின்றது. மேலும் இவ் நோக்கங்களை அடைவதனூடாக இவ் ஆய்வினைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதற்கிணங்க இவ் ஆய்வின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற விடயங்களானது இரண்டு வகையிலான நோக்கங்களாகவே வெளிக்கொணரப்படுகின்றது. அந்த வகையில் பிரதான நோக்கங்கள், துணை நோக்கங்கள் என்பவற்றை இவ்வாய்வு கொண்டதாக அமைந்துள்ளது.

**பிரதான நோக்கம்**:- சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட குறிப்பிட்ட சில பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) மாணவர்களின் ஆங்கிலப் பெறுபேறுகளின் வீழ்ச்சியினைக் கண்டறிதலும், அவ்வாறு வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களை முன்வைத்தலும்.

துணை நோக்கங்கள்:- அவ்வாறான காரணங்களுக்கான தீர்வுகளை தெளிவுபடுத்துவதும், கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) மாணவர்களின் வீழ்ச்சியின் நிலைமை தொடர்பாக பாடசாலைகளின் கவனம் எவ்வாறு காணப்படுகின்றது? அவ் நிலைமையிலிருந்து மீளுவதற்காக ஏதாவது தற்காலிகமான நடவடிக்கைகளை பாடசாலைகள் முன்வைத்துள்ளதா? என்பதை கண்டறிவது துணை நோக்கங்களில் உள்ளடங்குகின்றது.

**ஆய்வுக் கருதுகோள்**

கல்விப பொதுத் தராதர (சாதாரண தர) மாணவர்களின் ஆங்கில மொழிப் பெறுபேறுகளின் வீழ்ச்சி எனும் இவ்வாய்வினூடாக ஆங்கில மொழிப் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கான காரணங்களாக ஆங்கில மொழிக் கல்வியில் மாணவர்களுக்கு ஆர்வமின்மையும், ஆசிரியர்கள் ஆங்கில மொழிக்கல்வி

தொடர்பாக நவீன கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தாமை என்பன காரணங்களாக அமையக்கூடும் எனவும் இப்பிரச்சினைக்கான தீர்வாக நவீன தொழினுட்ப முறைகளான கேட்டல், பார்த்தல் நுட்பங்கள் (Audio visual aids), கணனி ஆய்வுகூடம் (computer labs), தொலைக்காட்சிப் பதிவுகள் (TV Recording) போன்ற பல முறைகளினூடாக மாணவர்களை ஆங்கில மொழிக் கல்வியில் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபடச் செய்ய முடியும் என்பதனை இவ்வாய்வின் கருதுகோளாகக் கொண்டு பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

**தரவு கேரிப்பு முறை**

ஆய்வு முறையியலானது ஆய்வினை முன்னெடுத்துச் செல்வதற்கான மூலகர்த்தாவாகத் திகழ்கின்றது. ஏனெனில் ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கான பல்வேறுபட்ட தரவுகள், தகவல்கள் என்பன ஆய்வு முறையியலின் அடிப்படையிலேயே பெறப்படுகின்றன. மேலும் ஆய்வொன்றினை செம்மையானதாகவும், நம்பகத்தன்மை கொண்டதாகவும் அமையப்பெறுவதற்கு ஆய்வு முறையியல் இன்றியமையாததாகும். மேலும் இவை புதிய கண்டுபிடிப்பிற்கு இட்டுச்செல்லும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் இத்தரவு சேகரிப்பு முறையானது முதலாம் நிலைத்தரவு, இரண்டாம் நிலைத்தரவு மற்றும் மூன்றாம் நிலைத்தரவுகள் என்பதாக அமையப்பெற்றுள்ளன.

ஓர் ஆய்வினை மேற்கொள்கின்ற போது அவ்வாய்வு தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்கு குறித்த ஆய்வின் களத்திற்கு சென்று சேகரித்தலையே முதலாம் நிலைத்தரவு குறித்து நிற்கின்றது. இங்கு ஆய்வாளன் நேரடியாக களத்துடன் தொடர்புடையவனாக காணப்படுவான். அந்தவகையில் குறித்த பாடசாலைகளுக்கு சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும், நேரடி அவதானிப்பின் மூலம் தரவுகள் பெறப்பட்டன. நேர்காணல் மூலமாகவும் ஆய்வுக்குத்தேவையான தரவுகள் செவ்வனே பெறப்பட்டன. அதாவது ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து நேரடியாக தகவல்கள் பெறப்பட்டன. மேலும் 20 வினாக்கொத்துக்கள் எளிய எழுமாற்று அடிப்படையில் வழங்கப்பட்டும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆங்கில மொழியின் அவசியம் தொடர்பாகவும், ஆங்கில மொழிப் பெறுபேறுகளின் வீழ்ச்சி தொடர்பாகவும் புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரைகள் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டு இவ்வாய்விற்கு பயன்படுகின்றது. இவ்வாய்விற்காக மூன்றாம் நிலைத் தரவுகளான இணையதளத்தின் மூலம் மாணவர்களின் ஆங்கில மொழிப் பெறுபேறுகளின் வீழ்ச்சி தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் திரட்டப்படுகிறது.

தரவுகளை சேகரிப்பதற்கு மொத்த எண்ணிக்கையில் ஓர் குறிப்பிட்ட எண்ணிக்கையை மாத்திரம் தேர்ந்தெடுப்பது மாதிரி எடுப்பு முறையாகும். அந்தவகையில், பல்வேறு வகையான மாதிரி எடுப்புமுறைகளில் எழுமாற்று மாதிரி முறையே இவ்வாய்விற்கு பயன்படுகிறது.

**தரவுப் பகுப்பாய்வு முறை**

இவ்வாய்விற்கான தரவுப்பகுப்பாய்வானது நேரடி அவதானிப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற தரவுகள், நேர்காணல், குழுக்களுடனான கலந்துரையாடல், வினாக்கொத்து என்பவற்றினூடாக பெறப்பட்ட தரவுகளை ஆதாரமாகக் கொண்டு ‘‘கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) மாணவர்களின் ஆங்கிலப் பெறுபேறுகளின் வீழ்ச்சி- சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட குறிப்பிட்ட சில

பாடசாலைகளை மையப்படுத்தியதோர் ஆய்வு'' எனும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளை உள்ளடக்கியதாக சேகரிக்கப்பட்ட தரவுகளானது அளவுசார், பண்புசார் பகுப்பாய்வுகள் செய்யப்படுவதோடு அவை காரணகாரியத் தன்மையின் அடிப்படையில் விஞ்ஞானத்தன்மையுடன் விமர்சன ரீதியாக பகுப்பாய்விற்குட்படுத்தப்படுகின்றது.

**பெறுபேறுகளும் முடிவுகளும்**

தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததன் பின் ஆங்கிலமொழி கற்பித்தல், கற்றல் தொடர்பாக பல்வேறு பிரட்சினைகள் கண்டறியப்பட்டுள்ளது. ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற தொழிற்பயிற்சி மற்றும் குறுங்கால கற்கைகள் என்பன குறைவாகவே வழங்கப்பட்டுள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. மேலும் வகுப்பறையினுள் ஒரு சில ஆசிரியர்களும் அதேபோல் மாணவர்களுமே ஆங்கில மொழியைப் பயன்படுத்துகின்றனர். அவ்வாறே நான்கு மொழித்தகைமைகளான கேட்டல்(listening), பேசுதல்(speaking), வாசித்தல்(reading), எழுதுதல்(writing) போன்றவற்றில் முன்னேற்றம் குறைவாகவே காணப்படுகின்றது. சில ஆசிரியர்களே சோடி வேலைகள்(pair works) மற்றும் குழு வேலைகள்(group works) என்பன போன்ற தொழினுட்பங்களைப் பயன்படுத்தி ஆங்கில மொழியை வினைத்திறனுடன் கற்பிக்க முனைகின்றனர்.

மேலும் பாடசாலைகளானது நூலகவசதியினைக் கொண்டிருப்பினும் ஆங்கிலப் பத்திரிகைகளின் பயன்பாடு என்பது குறைவாகவே காணப்படுகின்றது. கேட்டல் பார்த்தல் நுட்பங்கள்(audio visual aids) இன் பயன்பாடானது உரிய பாடப்பரப்பிற்கேற்ப வழங்கப்பட்டு பாடத்தின் பால் மாணவர்களை கவருவதற்கான உத்திகள் என்பது மிகவும் குறைவே ஆகும். ஒவ்வொரு வகுப்பறைகளும் மேலதிகமாக நிறைக்கப்பட்ட மாணவர்களைக் கொண்டு ஆங்கிலப் பாடமானது கற்பிக்கப்படுவதோடு ஆங்கிலமொழி எனும் ரீதியில் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. பாடத்தை கற்பதற்கான திட்டம் என்பதும் போதுமானதாக நேரம் ஒதுக்கப்பட்டு கற்பிக்கப்படாமை ஆங்கில மொழி கற்பித்தலில் நவீன ரீதியாகவும், தொழினுட்ப ரீதியாகவும் பல்வேறு கற்பித்தல் நுட்பங்கள் போன்றன பயன்படுத்தப்படாமை என்பன ஆங்கிலமொழியினுடைய ஆங்கிலப் பெறுபேறுகள் குறைவடைந்தமைக்கான காரணங்களாக செப்பனே கண்டறியப்பட்டது.

பாடசாலைகளில் ஆங்கில மொழியானது இரண்டாம் மொழியாக கற்பிக்கப்படுவதினால் அதனை பல்வேறு நவீன கற்பித்தல் நுட்பங்களைக் கொண்டு வழங்குகின்ற போதே மாணவர்கள் அதனை தெளிவாகவும் சுவாரஸ்யமாகவும் புரிந்து கொள்ள முடியும். ஆகவே ஆங்கில மொழியினுடைய பரீட்சைப்பெறுபேறுகளின் தொடர்ச்சியான வீழ்ச்சிக்கு மாணவர்களின் மத்தியில் ஆங்கிலக் கல்வியினுடைய முக்கியத்துவத்தினை தெளிவுபடுததைுவதும், பழமையான கற்பித்தல் முறைகளுக்கு பதிலாக நவீன கற்பித்தல் நுட்பங்களைக் கொண்டு கற்பித்தலை செவ்வனே செய்தலானது இவ்வாய்வினுடைய பிரட்சினைக்கு தீர்வாக அமையும். அதாவது மாணவர்கள் ஆர்வத்தோடு கற்பதற்கு தொலைக்காட்சிப் பதிவுகள்(TV Recordings), கணனி ஆய்வுகூடம்(Computer labs), சோடி வேலைகள்(Pair works), குழு வேலைகள்(Group works), கேட்டல் பார்த்தல் நுட்பங்கள்(Audio visual aids), சத்தமாக வாசிக்கும் பயிற்சி(Aloud reading practice), போன்றவற்றை பாடத்தின்

உப பகுதிகளுக்கு ஏற்ப பயன்படுத்தி மாணவர்களின் கவனத்தை ஆங்கில மொழி கற்பித்தலில் ஒருமிக்கச் செய்வதே சிறந்ததாக அமையும்.

**இலக்கிய மீளாய்வு**

இவ்வாய்வுத் தலைப்புடன் தொடர்புடைய நேரடி இலக்கியங்களை பெற்றுக்கொள்வதிலுள்ள சிரமத்தின் காரணமாக இந்த ஆய்வுக்கான துணை இலக்கியங்களான ஆய்வுக் கட்டுரைகள் பயன்படுத்தப்படுகின்றது.
Sameem, M.A.M, " Level of English language proficiency among rural and urban based learners in srilanka" என்ற தலைப்பில் இலங்கையின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் கற்கின்ற மாணவர்களது ஆங்கில மொழி தொடர்பான ஆய்வின் போது குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் ஆங்கில மொழியினுடைய திறமை எவ்வாறு காணப்படுகின்றது என்பது தொடர்பாக ஆய்வில் கவனம் செலுத்தப்படுகிறது. இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளைக் கொண்டும் அளவுசார், பண்புசார் தரவுகளைக் கொண்டும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பல்கலைக்கழக மாணவர்களிடத்தில் 139 வினாக்கொத்துக்களும், ஆசிரியர் பயிற்சி கல்லூரி ஆசிரியர்களிடம் 99 வினாக்கொத்துக்களும் சினியோகிக்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. மேலும் எளிய எழுமாற்று முறையே இவ்வாய்விற்கு தெரிவு செய்யப்பட்டது. இவ்வாய்வின் மூலம் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் கற்பவர்களின் மொழி மற்றும் ஆங்கில மொழி கற்றல், கற்பித்தல் செயர்பாட்டில் கடந்த போரின் தாக்கம் என்பன தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என கண்டறியப்பட்டது.

JayasudaraJ, M.P.V.K, "A Study on ascertaining the undergratuates perspectives on having exposure in English" என்ற தலைப்பில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள் 165 பேரைப் பயன்படுத்தி ஆங்கில மொழியின் தேர்ச்சி தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் (90.91 வீதம்) ஆன பல்கலைக்கழக மாணவர்கள் எழுதும் போது சரியாக எழுத்துக்களை பயன்படுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் எனவும் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறான பிரச்சினைகளைக் களைவதற்கு சிறந்த பயிற்சிகள் மற்றும் கற்பித்தல் சாதனங்கள் என்பன பயன்படுத்தப்பட வேண்டும் என ஆய்வின் தீர்வாக கொண்டமையப் பெற்றுள்ளது.

Leslei kahari, "The teaching and learning of advanced level, English language and communication skills" என்ற தலைப்பில் இவ்வாய்வானது அளவு ரீதியான, பண்பு ரீதியான தரவுகளைக் கொண்டதாகவும், 60 வினாக்கொத்துக்கள் 7 பாடசாலைகளுக்கு பகிரப்பட்டடும் தரவுகள் பெறப்பட்டுள்ளது. மேலும் ஆய்வாளர் ஆசிரியர், மாணவர்களிடம் நேரடி அவதானம் மூலமாகவும் ஆங்கில மொழித் தொடர்பாடல் திறமை, கற்கை தொடர்பாகவும் அவதானம் செலுத்தியுள்ளார். இதனூடாக ஆங்கில மொழியின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கையினை ஆசிரியர்கள், மாணவர்களது சாதகமான பாதகமான செயர்பாடுகளையே நோக்கமாகக் கொண்டு அமைகின்றது என கண்டறியப்பட்டது. மேலும் இவ்வாய்வினூடாக அப்பாடசாலைகளுக்கு ELCS specialist ஆசிரியர்கள் வேண்டும் எனவும் பாடங்களானது போதுமான நிதிவளம், மூலகங்களைக் கொண்டு உரிய முறையில் கற்பிக்கப்பட வேண்டும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

Zimbabwe school examinations council, "English language" என்ற தலைப்பில் இவ்வாய்வானது க.பொ.த (சா/த) மாணவர்களது பாடப்பரப்பினைக் கொண்டதாக

அமைந்துள்ளது. மேலும் இவ்வாய்வினூடாக எவ்வாறு ஆங்கில மொழியானது கற்பிக்கப்பட வேண்டும் என்றும் எவ்வாறான விடயங்களை ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆங்கில மொழியினை கற்பிக்கின்ற போது கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் பயன்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறே Pushpakumara, W.M.N.S, "Reviewing of the performance of school candidates" என்ற தலைப்பில் க.பொ.த (சா/த) மாணவர்களின் பெறுபேறுகள் தொடர்பாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**உசாத்துணை நூல்கள்**

JayasudaraJ, M.P.V.K, "A Study on ascertaining the undergratuates perspectives on having exposure in English" (http://hdl.handle.net/123456789/1210)

Leslei kahari, "The teaching and learning of advanced level, English language and communication skills" (www.donets.lk>symposium-2011-new)

Pushpakumara, W.M.N.S, "Reviewing of the performance of school candidates" (Max papers.com>1123_s11_ms_21)

Sameem, M.A.M, " Level of English language proficiency among rural and urban based learners in srilanka" (http://ir.lib.seu.ac.lk/handle/123456789/825)

Zimbabwe school examinations council, "English language"(www.ijern.com>journal>february_2014)